விலை ரூபா 1-00 ★

ஈழநாடு

THE EELANADU

24 ஆனி 17 றம்ழான் 9 இதழ் 138

பாணம் வியாழக்கிழமை 1—7—82


# குட்டிமணி, ஜெகன், தேவன் விலங்கு அகற்றப்பட்டது

(கொழும்பு)

குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை தேவன் ஆகியோருக்கு பனாகொடை இராணுவ முகாமில் 24 மணிநேரமும் போடப்பட்டிருந்த விலங்குகள் அகற்றப்பட்டன.

14 மாதங்களாக நித்திரை செய்யும் நேரம் உட்பட 24 மணி நேரமும் இவர்களுக்கு விலங்கு போடப்பட்டிருந்ததாகவும் அதனால் அவர்களுக்கு பெரும் கஷ்டம் ஏற்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ அமிர்தலிங்கமும், கலாநிதி நீலன் திருச்செல்வமும் ஜனாதிபதியிடமும் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரம் பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு.ரி. பி. வெரப்பிட்டியா விடமும் புகார் செய்ததை அடுத்தே அவர்களுடைய விலங்குகள் நீக்கப்பட்டுள்ளதாம்.

இவர்கள் நால்வரையும் சட்டத்தரணி திரு. எஸ். நவரத்தினம் (கரிகாலன்) நேற்று பனாகொடை இராணுவ முகாமில் சந்தித்தார்.

இக்கைதிகள் நால்வரும் தற்போது முகாமில் அவசிய தேவைப்படும் நேரங்கள் தவிர ஏனைய வேளைகளில் விலங்குகள் இன்றியே இருக்கின்றனர்.

இதே வேளையில் இவர்கள் 10 நாட்களுக்கு ஒரு தட்வையே குளிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள் எனவும் குறைந்த அளவு சாப்பாடே இவர்களுக்குக் கொடுக்கப்படு

[8-ம் பக்கம் பார்க்க]

★ மனைவி ★ நான்கு வயது மகன் ★ 3 லட்சம் டாலர் கோரிக்கை ★

# இத்தாலிய ஜெட் விமானத்தை இலங்கை இளைஞர் கடத்தினார்!

## 257 பிரயாணிகளின் உயிர் ஊசலாடுகிறது!!

(பாங்கொக், ஜூன், 30)

இத்தாலிய விமானத்தை செவ்வாய்க்கிழமை இரவு கடத்திய இலங்கையைச் சேர்ந்த எக்கநாயக்க சேபால; தாய்லாந்து படையினரிடம் சரணடைவாரா, அல்லது விமானத்தைக் கைக்குண்டுகள் மூலம் தகர்த்து விடுவாரா என்பது குறித்து; இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தகவல் கிடைக்கவில்லை. ஆனாலும் விமானத்தை திசைதிருப்பிய இலங்கையரின் மனைவி; தமது மகனுடன் நாளை (வியாழன்) காலை பாங்கொக் போய்ச் சேருவாரென்று அறிவிக்கப்பட்டது.

இவரின் மனைவி தமது மகனுடன் ரோமாபுரியிலிருந்து பாங்கொக்கிற்கு விமானமொன்றில் புறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முன்னர் தமது மகனுடன் பாங்கொங்கிற்கு வரமறுத்த இப்பெண், தற்போதுவரஇணங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

விமானத்தை திசைதிருப்பிய இலங்கையர் வெடிகுண்டுகளை நெஞ்சுக்குள் வைத்திருப்பதுடன், ஷேர்ட் கொலரில் வயர்களையும் பொருத்தியுள்ளதாகவும் கூறப்பட்டது.

இந்நபர் அவரது வாழ்நாளில் மூன்று தடவைகள் தற்கொலை செய்ய முற்பட்டவரென்றும் கூறப்பட்டது.

(முன்வந்த செய்தி)

**261 பிரயாணிகளுடன் டோக்கியோ நோக்கி சென்று கொண்டிருந்த போயிங் ஜம்போ ஜெட்**

[8-ம் பக்கம் பார்க்க]

## நாட்டுக்குச்சிறந்த சேவையாற்றுபவர்களுக்கு ஜனாதிபதி விருது

(கொழும்பு)

இந்தியாவைப்போன்று இலங்கையிலும் பல்துறைகளிலும் சாதனைபுரிந்தவர்களுக்கு தேசிய விருதுகளை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதுபற்றி திரு ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்று பத்திரிகையாளர்களிடம் எடுத்துக் கூறினார்.

நாட்டின் சுதந்திர தின வைபவத்தன்று ஆண்டுதோறும் ஜனாதிபதி இவ்விருதுகளைவழங்குவார்.

விருதுகளின் விபரம் வருமாறு;-

நாட்டின்அதிகார அதிதனித்துவ அதி கௌரவ 'விருதாக 'சிறீ லங்கா அபிமான்ய, வழங்கப்பட இருக்கிறது. இதுவே

(8-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை

(கொழும்பு)

இத்தாலிய விமானக் கடத்தல் குறித்து நேற்று நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. (ம-இ)

## சிப்பந்திகள் வெளியேறினர்

புதுடில்லி, ஜூன் 30

வங்காளக்கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும் பனமாக் கப்பலிலிருந்து அதன் சிப்பந்திகள் வெளியேறிவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க வர்த்தகக் கப்பலொன்று இச்சிப்பந்திகளை மீட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [வெ]

## வங்கி ஊழியர் லீவு ரத்து!

[கொழும்பு]

வங்கிகளில் இன்று நடைபெறும் வேலைநிறுத்தத்தினால் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படாதவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அமைச்சரவை நிதிஅமைச்சர் திரு. றொனி டிமெல்லைப்பணித்துள்ளது.

இத்தகவலை ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்தார்.

இவ்வேலை நிறுத்தத்தில் ஜாதிக சேவா சங்க ஊழியர்கள் கலந்துகொள்ளவில்லை என்றுகைத்தொழில்விஞ்ஞான அமைச்சர் திரு. சிறில் மத்யூ தெரிவித்துள்ளார்.

அதேவேளையில் வங்கி ஊழியர்களின் லீவுகள் யாவும் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. [ம-இ]

## தி. மு. க. எம். பி. காலமானார்

சென்னை, ஜூன் 30

தி. மு. க.வின் பெரியபுலம் தொகுதி லோக்சபா உறுப்பினர் திரு. என். நடராஜன் [44 வயது] நேற்று காலமானார்.


இன்று மங்களகரமான திறப்பு விழா

வருக! 1-7-1982 வருக!

குதூகலமான நிகழ்ச்சிகளுக்கும் கோலாகலமான பண்டிகைகளுக்கும் ஏற்ற பிடவை வகைகள் தேர்ந்தெடுக்க கைராசியான ஸ்தாபனம்

★ எழில்மிகு பட்டுச் சேலைகள்
★ உயர்ந்தரக வேஷ்டிகள்
★ நவநாகரீக ரெடிமேட்உடுப்புகள்
★ எல்லாவித துணி வகைகளுக்கும்

சுமங்கலி பிடவை மாளிகை

34, நவீன சந்தை, போன்: 7058 யாழ்ப்பாணம்.
கிளை:
செந்தூரன் ரெக்ஸ், 40, நவீன சந்தை. யாழ்ப்பாணம் 3722

யப்பான் நாட்டு உயர்ரக சீமெந்து விற்பனைக் துண்டு

Dove Brand Portland Cement 103|- PER 50KGS

மஸ்கன்ஸ் லிமிட்டெட்

35, ஸ்ரான்லி ரோட், (தொலைபேசி:- 8221) யாழ்ப்பாணம். 3711

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சண்டிலிப்பாய் கல்வளை ரோட் முடிவு மதவடி ஆலங்குளாய் தொடக்கத்தில் 7 பரப்புக் காணியும் வீட்டுடன் கடையும் விற்பனைக்குண்டு. (மின்சாரம், தண்ணீர்சகல வசதிகளும் உண்டு) விபரங்களுக்கு: மேற்படி விலாசத்தில் திரு. S. மார்க்கண்டுவுடன் தொடர்பு கொள்ளவும். (3705)

படித்துவிட்டீர்களா? விற்பனையாகின்றது சனிமாற்றம் பன்னிரண்டு ராசிகளின் பூரண பலன் விலை ரூபா 2/- சோதிடமணி V. A, சிவராசா B. A. Phil, வேலணை (3708)

ஊரெழு, நீர்வேலி — கரந்தன் வீதியில் பிரதான இடத்தில் அமைந்துள்ள பதினறு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: பீ. செல்வலிங்கம், 'லிங்கவாசா', உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (3710)

கண்டாவளை நல்லூர் கமத்துக்கு முன்னல் உள்ள வயல் நிலம் 10 ஏக்கர் நீர்வசதியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: காராளர் நவரத்தினம், விமலாஸ் உரிமையாள், சாவகச்சேரி. (3715)

சாய்ப்புச்சாமான்கள் விற்பனை செய்யும் கடைகளுக்குரிய 3 அலுமாரிகள் உடன் விற்பனைக்குண்டு. இல 8. இ. சுப்பிரமணியம் அன் கொம்பனி, காங்கேசன் துறை வீதி, சுன்னுகம். (3704)

கொக்குவில் பொற்பதி வீதியில் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அருகில் ஆறு பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. குழாய்நீர் வசதியுடன் பன்னிரண்டு தென்னை, பலா, பயன் தரும் மரங்களும் உண்டு. தொடர்புகளுக்கு: ஜோசப் வில்மட், பொற்பதி வீதி, கொக்குவில் (3721)

சன்யோ பால்/சீக்கம் VHF UHF 16'' கலர் டி. வி. நஷனல் வீடியோ கசற் (NV 8600 EMVHS இரண்டும் புதியவை. விற்பனைக்குண்டு. தொடர்பு: 84, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (3694)

புனரமைக்கப்பெற்ற Honda C/90 மொடல்கள் விற்பனைக்குண்டு. நா. சாப்பசிவம் அன் கோ 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [3695]

## தேவை

கமிசன்அடிட்படையில் பீடி சுற்றித் தருவதற்கு ஒப்பந்தகாரர் தேவை. தொடர்பு கொள்ளவும். நிர்வாகி, ஆர். வி. ஜி. பீடிக்கம்பனி, 275. பீச் ரோட், யாழ்ப்பாணம். 3663

பெண் அறிவிப்பாளர் தேவை. ஒலிவாங்கிக் கருவிக்குரிய குரல் வளம் உடையவர்கள் மாத்திரம் 05-07-82க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். மேஜர்ஷண், மணிக்குரல் விளம்பரசேவை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (3696)

## பயிற்சி

வெல்டிங், மோட்டார் மெக்கானிஷம் ஆகிய வகுப்புக்கள் 05-07-82 காலை 9-30 மணிக்கு ஆம்பமாகும். தகுதிச்சான்றிதழ் வழங்கப்படும். கே. ஜீ' ஸ் இன்ஸ்ரிரியூட், 37, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (3717)

வெல்டிங், வயறிங், மோட்டார் இயந்திரவியல். செய்முறை அறிமுறையுடன் வகுப்புக்கள் ஆரம்பம்: 03-07-82 நேரில் வரவும். C. E. T. ஜலன்ட் இன்ஸ்ரிரியூட், (விகாரைக்கு எதிரில்), 58, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (3693)

## வகுப்புகள்

அரசாங்க அங்கீகாரத்துடன் வெளிநாடு செல்பவர்களுக்கும், வெளிநாடு செல்லவிரும்பபவர்களுக்குமென விசேட வெல்டிங், வயறிங், மோட்டார் மெக்கானிசம் வகுப்புகள் 04-07-82ல் ஆரம்பமாகின்றன. யாழ்நகரில் அதிக செய்முறை, அறிமுறையுடன் குறுகிய காலத்தில் நடைபெறும் பயிற்சி இதுவாகும். விசேட ஆங்கிலமும் போதிக்கப்படும். அரச அங்கீகாரம் பெற்ற The Jaffna Engineering Collegeல் விபரங்களை அறிந்து கொள்ளுங்கள். அதிபர், J E C. 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். யாழ். புகையிரதக்கடவைக்கு அருகில் (3712)

## சுன்னுகம் ப. நோ. கூ. சங்கம்

வரையுள்ளது)

சுன்னுகம்

## முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்க 24/976 இலக்கம் கொண்ட லொறியின் பொடி திருத்தத்திற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் கேள்விப்பத்திரங்களை சங்கத்தில் ரூபா 2/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். லொறியைப் பார்வையிட்டு, கேள்விப்பத்திரங்களைப் பூரணப்படுத்தி 10-7-82க்கு முன்பு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
சுன்னுகம் ப. நோ. கூ. சங்கம்,
சுன்னுகம்,
28-06-82. (3703)

## மாதர் சங்கம்

[புலோலி]

இலங்கைக் குடும்பத்திட்டச் சங்க ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய குடும்ப நலத்திட்டத்தின் கீழ் துன்பளையில் மாதர் சங்கமொன்று இம்மாதம் 5ம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் படவுள்ளது

துன்பளை சைவப் பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ள இம்மாதர் சங்க அங்குராப்பண்க்கூட்டத்திலே இலங்கை குடும்பத் திட்டச்சங்கத்தைச் சேர்ந்த திருமதி யோகா பாலச்சந்திரன், இலங்கைக் குடும்பத் திட்டச் சங்க யாழ். மாவட்ட செயலாளர் திருமதி யோகேந்திரா துரைசாமி ஆகியோர் கலந்து கொள்கின்றனர். [க

## முதலிலேயே விதிக்கப்பட்ட பூரணதீர்ப்பு

மாவட்ட நீதிமன்று
பருத்தித்துறை

இல 1136 / T

இறந்த வேலுப்பிள்ளை சீவரத்தினத்தின் மரண சாதனம் சம்பந்தமாக சீவரத்தினம் கைப்பெண் நாகரத்தினம்
துன்பளை, பருத்தித்துறை.
—மனுதார்

இவ்வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் மேலே குறிப்பிட்ட இறந்தவரின் மரண சாதனத்தை ஒப்பேற்றுவதற்காக தாக்குதல் செய்யப்பட்டது. எனவே முதலிலேயே விதிக்கப்பட்ட பூரண தீர்ப்பு 1982ம் ஆண்டு மாசி மாதம் 9ஆம் திகதி பதியப்பட்டுள்ளது.

1982ம் ஆண்டு ஆனி மாதம் 8ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி
(ஒப்பம்)
க. செல்வராசா,
பதிவாளர்.

இ. சதானந்தன்,
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்,
புலோலி தெற்கு- புலோலி.
3691

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## இன்றைய பலன்

ஆனி மாதம் 17-ம் திகதி
வியாழக்கிழமை
(1—7—82)

மேடம்: மனைவாழ்வில் மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படும். குழந்தைகளின் முன்னேற்றமும் திருப்தியை அளிக்கும் வருமானத்திலும் உயர்ச்சி கிடைக்கும். நல்ல நாள்.

இடபம்: செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும் சதிசெய்வதற்கு சசாக்களை சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர் பிரயாணத்தை தவிர்க்கவும்.

மிதுனம்: குறிக்கோளில் இன்று வெற்றிகிடைக்கும். இலட்சியவாதிகள் போற்றப்படுவார்கள். பரந்த மனப்பான்மையுடன் செயலாற்ற விரும்புவீர்கள்,

கடகம்: தொழில் புரியும் இடத்தில் மேலிடத்து ஆதரவு கிடைக்கும். புதுத்துறைகளில் நாட்டம் பிறக்கும். பதவி உயர்வுடன் சிலருக்கு மாற்றமும் கிடைக்கும்.

சிங்கம்: வரவில் உயர்வு தென்படும். பெரியவர்களின் வாழ்த்தும் கிடைக்கும். எழுத்தாளர்களுக்கு சிறப்பான தினம். கலைஞர்களுக்கு இன்று புகழ் குவியும். நல்ல நாள்.

கன்னி: தானிய விருத்தியில் எதிர்பாராத நஷ்டம் ஏற்படலாம். விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். அதிகசிந்தனையின் மூலம் சிறிய தலையிடியும் தோன்றும.

துலாம், கண்துடைப்புவேலை நடைபெறும். வீட்டில் சிறிய பூசல் தலைதூக்கும்' எந்த விடயத்திலும் நன்குகஆலோசித்த பின்பே முடிவெடுக்கவும் துக்க தினம்.

விருட்சிகம்; நலன் தரும் சம்பவங்கள் நடக்கும். நலிவு சொல்லாமல் பறக்கும். இல்லத்தில் இனிமை பிறக்கும். கல்வி கற்போருக்கு இன்று சிறப்பான தினம்.

தனு: ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு. குறுக்கு வழிகளில் இறங்க வேண்டாம். வீட்டில் சிறு பிணி தலை தூக்கும். துக்க தினம்.


மகரம்: மாதுரு வழிப் பெருமைக்கு இடமுண்டு. மனம் போல்யாவும் நடக்கும். இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும். நல்ல நாள்.

கும்பம்: இனபந்துக்களுடன் உறவு முறைகள் பலப்படும். புண்ணிய காரியங்களில் அதிக விருப்பம் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

மீனம்: பட்சமாகப் பேசுபவர்களே பக்கத்தில் படுகுழி தோண்ட முனைவர். ஆணவப் போக்குமற்றவர்களின் வெறுப்பைத் தேடித்தரும். குடும்பத்தில் உடல் நலம் குன்றும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## நினைவாஞ்சலி



### கதிரேசபிள்ளை தர்மலிங்கம்

தோற்றம்: 23—1—1906 மறைவு: 30—6—1974

''வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''.

மூத்தையா மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளராகிய கொட்டடியைச் சேர்ந்த க. தர்மலிங்கம் அவர்களின் எட்டாவது நினைவுதினம் இன்று.

எங்கள் இல்லத்தின் அணையாச் சுடர் விளக்கே! இதயத்தின் ஜோதியே! சாந்தத்தின் திருவுருவே! பாசத்தின் பிறப்பிடமே! பண்பின் சிகரமே! அன்புக் கடலே! குலத்தை ஒங்கவைக்க வந்துதித்த குலவிளக்கே! நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து இன்றுடன் எட்டாண்டுகள் முடிவடைந்துவிட்ட போதிலும் நீங்கள் எங்கள்இதயங்களில் நிறைந்துள்ளீர்கள். உங்கள் ஆத்மா சாந்தி பெற்று எங்கள் உள்ளங்களில் என்றும் தெய்வமாய் அமர்ந்து சாந்தி அருள்வீர்களாக.

இவ்வண்ணமே இறைவனைப் பிரார்த்திக்கும்,
தர். முத்துலிங்கம்

''கண்மணி பங்களா'',
67/45, தர்மலிங்கம் அவெனியூ,
கொட்டடி, யாழ்ப்பாணம். 3720

## ரத்து

(யாழ்ப்பாணம)

வடமராட்சி கல்வி வட்டம் பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய முன்றலில் ஒழுங்கு செய்திருந்த தமிழ்நாடு பேராசிரியர் க. த. திருநாவுக்கரசின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணங்களால் ரத்துச் செய்யப்பட்டுள்ளதென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (கி

## கருத்தரங்கு

(புலோலி)

வடமராட்சி கல்வி வட்டத்தால் ஒழுங்கு செய்யப் பட்ட கருத்தரங் கொன்று பருத்தித் துறையில் நடைபெற்றது.

யாழ் பல்கலைக் கழக விலங்கியல் துறைபேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் கருத்துரைகளை வழங்கினர். விளக்கப்படங்களுடனன விளக்கங்கள் அளிக்கப் பட்டன இக்கருத் தரங்சிற்குப் பாடசாலை மாணவ மாணவிகள் பெருமளவில் சமூகமளித்திருந்தனர் (க)

## சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி

(அரியாலை)

பாடசாலைகள் கிரிக்சட் சங்கத்தின் ஆதரவில் வடபிரதேசப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் கலந்துகொள்வதற்கு யாழ். சென்ற். பற்றிக்ஸ் கல்லூரியும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன

அரை இறுதிப் போட்டியில் கலந்துகொண்ட யாழ். பரியோவான் கல்லூரிக் கோஷ்டியை யாழ். சென்ற். பற்றிக் கல்லூரி தோற்கடித்துவெற்றி பெற்றது. யாழ். மத்திய கல்லூரிக் கோஷ்டியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக் கோஷ்டி தோற்கடித்து வெற்றியீட்டியது. இறுதிப் போட்டி ஜூலை மாத முற்பகுதியில் நடைபெறவிருக்கிறது.

## அணு ஆயுதக் குறைப்பு:

# அமெ. ரஷ்யா பேச்சுவார்த்தை ஜெனிவாவில் ஆரம்பம்!

### பிரதிநிதிகள் ஒரு மணிநேரம் மனம்விட்டு பேசினர்கள்

வாஷிங்டன், ஜூன். 30

அமெரிக்காவும் சோவியத்தும் அணுஆயுத குறைப்பு பற்றிய பேச்சுவார்த்தையை இன்று ஜெனிவாவில் ஆரம்பித்தன.

இப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து வரலாற்றுமுக்கியத்துவம்வாய்ந்த ஒரு தீர்மானம் எடுக்கப்படவேண்டும் என அமெரிக்க ஜனதிபதி றீகன் வலியுறுத்தினர்.

பேச்சுவார்த்தை வெற்றியளிக்கும் பட்சத்தில் பல்லாயிரக்கணககான அணுஆயுத உற்பத்தி கைவிடப்படும்எனக் கூறப்படுகிறது.

இத் தீர்மானம் சரியான முறையில் அமுல்செய்யப்பட வேண்டுமென்றும் அப்படியானல்தான், அமெரிக்க மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்றும் அமெரிகக ஜனதிபதி தெரிவித்துள்ளார்

பேச்சுவார்த்தையில் சோவியத் சார்பில் விக்டர் கபாவும், அமெரிக்கா சார்பில் எட்வாட் எனேவும் கலந்துகொண்டு சுமார் ஒருமணிநேரம் மனம்விட்டுப் பேசினர்கள் எனக் கூறப்படுகிறது.

அணுஆயுத குறைப்புபற்றிய பேச்சுவார்த்தை முதன் முதலில் 1869ம் ஆண்டுஆரம்பமானது 1972ல் மொஸ்கோவில், இதுதொடர்பான உடன்படிக்கையொன்று கைச்சாத்தானது என்று கூறப்படுகிறது. (க)

### ஒரு இலக்கியக்குரல்

(யாழ்ப்பாணம்)

ஈழத்திலிருந்துஓர் இலக்கியக் குரல்'' நூல் அறிமுகவிழா

(6ம் பக்கம் பார்க்க.

### கொழும்பு திட்டம் 31வது ஆண்டுதினம் இன்ருகும்

(கொழும்பு)

கொழும்பு திட்டத்தின் 31ம் ஆண்டுதினம் இன்ருகும்.

7 நாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் இன்று 26 அங்கத்துவ நாடுகள் இருக்கின்றன. இவற்றில் 20 நாடுகள் வளர்முகநாடுகளாகும்.

தொழில்நுட்பதொடர்பு, உணவு விநியோகம் சமூக சேவை போன்ற நடவடிக்கைகள் இத்திட்டத்தின் மூலம் எடுக்கப்பட்டுவருகிறது.

கடந்த 31 ஆண்டுகளாக, வழங்கப்பட்ட மூலஉதவி 6130 கோடி டாலராகும். (க)

### வீரமாகாளியம்மன் தேர் உற்சவம்

(நல்லூர்)

வண்ணை வீரமாகாளியம்மன் ஆலய தேர்த்திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறுகிறது.

திருவிழாவை முன்னிட்டு பிடி அரிசி வழங்கும் அடியார்கள் தேவஸ்தானத்தில் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

வடஎல்லையில்

### ஈரான்-ஈராக் யுத்தம் மீண்டும் ஆரம்பம்!

லண்டன், ஜூன். 30

ஈரான்-ஈராக் வடஎல்லையில் மீண்டும் யுத்தம் ஆரம்பித்துள்ளது.

சர்வதேச ரீதியில் அறிவிக்கப்பட்ட எல்லையிலிருந்து படைகளை வாபஸ் பெற்றுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளதை ஈரான் மறுத்துள்ளது.

ஈரான் தன் வசமுள்ள பகுதிகளை தொடர்ந்து வைத்திருப்பதாக ஈரான் உயர் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

இராணுவ விலகல்பற்றிய

### உத்தரவாதமளிக்க இஸ்ரேல் பிரதமர் மறுப்பு!

லண்டன், ஜூன். 30

மேற்கு பெய்ருட்டில் இராணுவம் விலகியிருக்கும் என்ற உத்தரவாதத்தை அளிக்க இஸ்ரேலிய பிரதமர் திரு. பெகின் மறுத்துவிட்டார்.

அப்படியான உத்தரவாதமொன்றை அளிக்குமாறு எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி கோரிக்கைவிடுத்திருந்தது.

இம்மாதம் 6ம் திகதி லெபனன் யுத்தம் ஆரம்பமான நள்முதல், இஸ்ரேலியபடைகளால் 18,000 பேர் கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய பிரதமர் அறிவித்துள்ளார்.

சுற்றிவளைக்கப் பட்டிருக்கும் பலஸ்தீனிய விடுதலை கமாண்டோக்களை விமானமூலம் அப்புறப்படுத்தும் யோசனை ஒன்றை சவூதிஅரேபியா வெளியிட்டுள்ளது. எந்தநாடும் இதுபற்றிய கருத்தை தெரிவிக்கவில்லை. (க)

சோவியத் -- மே. ஐ. நாடுகள்

### நேரடி தொலைபேசி தொடர்புகள் குறைக்கப்படும்

மொஸ்கோ, ஜூன், 30

சோவியத் ரஷ்யா மேற்கு ஐரோப்பிய நாடுகளுடனை நேரடி தொலைபேசி தொடர்புகளை குறைத்து கொள்ளவிருகிறது. தொலைபேசி ஊழியர்கள் பற்றுக்குறையே இதற்குக் காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது. முன்பு இருந்ததிலும் பார்க்க 50சதவீத நேரடி தொலைபேசி தொடர்புகுறைக்கப்பட விருக்கிறது.

பிரிட்டன், மே. ஜெர்மனி, பிரான்ஸ் இத்தாலி ஆகிய நாடுகள் இம்முடிவினல் பாதிக்கப்படவிருக்கின்றன. சோவியத்துடனை வர்த்தக தொடர்புகளும் இதனல் பெரும் பாதிப்பு ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா சோவியத் நேரடி தொடர்புகளும் இதனல் ஓரளவு பாதிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

### தடை நீங்கியது

லண்டன், ஜூன். 30

ஆர்ஜென்டீன மீதான பொருளாதார தடைகளை அவுஸ்திரேலியா நீக்கியுள்ளது.

போக்லண்ட் போரைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா பொருளாதாரதடை விதித்திருந்தது (க)

'நூலாசிரியரின் குறிக்கோள்

### கீழ் மட்டத்து மக்களை மேல் மட்டத்திற்கு உயர்த்துவதாகும்''

#### தஞ்சையில் 'பஞ்சமர்' வெளியீட்டுவிழா

சென்னை, ஜூன் 30

''பொதுவாக உலக இலக்கியங்களில் நூலக வரலாறு என்பது 16ம் நூற்றுண்டிலே ஆரம்பிக்கப் பட்டது. ஆனல் ஈழத்து தமிழ் நாவலும், எமது தமிழ் நாவலும், ஏறக்குறைய சென்ற ஆண்டு இறுதியிலேயே வரலாறுத் தொடக்கத்தை ஏற்படுத்தியது எனலாம்.''

தஞ்சை நகரில் ஈழத்து எழுத்தாளர் கே. டனியலின் 'பஞ்சமர்' நூலை வெளியிட்டு வைத்த பேராசிரியை திருமதி ரி. கிருஷ்ணமூர்த்தி மேற்கண்டவாறு கூறினர்.

திருவையாறு தமிழ் கல்லூரித் தலைவர் பேராசிரியர் பாரதிபித்தன் தலைமையில் நடந்த இவ் விழாவில் பேராசிரியை திருமதி. கிருஷ்ணமூர்த்தி மேலும் கூறியதாவது:

'பொதுவாக நாவல்களுக்கு பலவகையான உத்திகள் உண்டு. பெரும்பாலும் மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் நாவல்கள் ஜனரஞ்சகமாக இருப்பது மிகவும் அவசியம். ஏனென்றல் அடிமட்ட மனிதன் வரை சென்றடைய வேண்டும் கூட வேண்டும் என்ற ஒரே ஒருமுக்கியமான நோக்கத்திற்கு மட்டுமன்று பல பிரச்னைகள் பற்றி, பல வகைகளிலும் தமது சிந்தனைகளை தூண்டக்கூடி" தாகவும் இருக்கும்.

''ஆரம்பகாலத்தில் நாவல்கள், வரலாறு கற்பனை ஒவியம்; வீரப்பிரதாபம் போன்ற அமைப்பில் வந்துகொண்டிருந்தன. ஆனல் காலப்போக்கில், வளர்ச்சியடைந்தபின், நாவல்களிலும், முறைப்படி அமைந்த பரிணும வளர்ச்சியை காண்கிறேம் குறிப்பாக ஈழத் தமிழ் நாவல்கள் ஆரம்ப காலம் தொடக்கம் ஒன்ருக இருந்த போதிலும், இந்த வளர்ச்சியின் இறுதியில், தற்போது நாம் யதார்த்தமாக சித்தரிக்கப்பட்ட நாவல்களையே நாம் பெரிதாக விரும்புகின்றேம். இலக்கிய வளர்ச்சியின் இறுதியில் அமைந்துள்ள இந்தக்காலகட்டத்தில் பொதுவான நிசர்சனமான உண்மைகளைப்பற்றிக் கூறக்கூடிய நாவல்கள் தமது சிந்தனையை தூண்டக்கூடியனவாக உள்ளன. இத்தகைய நாவல்களை பிரசார நாவல்கள் என முத்திரை குத்திக்கொள்வதும் உண்டு. பெரும்பாலும் இந் நாவல்கள் குறிக்கோள் நாவல் என்றும் கூறப்படுவதுண்டு.

''பஞ்சமா'' நூலாசிரியரின் ஆழ்ந்த குறிக்கோள் கீழ் மட்டத்து மக்களை மேல் மட்டத்திற்கு உயர்த்துவதாகும். பெரும்பாலும் நூலாசிரியர் தனிப்பட்ட கருத்துக்கள் சரி, எண்ணங்கள் சரி மண்பாசம் மிக்க. பிரதேச பாசம்மிக்க கீழ்மட்டத்து மக்களை மேல் மட்டத்திற்கு உயர்த்துகின்ற பணிகளை கொண்டிருக்கிறது. இந்நாவல் வெற்றிகரமான படைப்பாகும்.

பேராசிரியர் மார்க் வரவேற்புரை நிகழ்த்துகையில் கூறிய

(6-ம் பக்கம் பார்க்க)

### 4000 மருத்துவ விஞ்ஞானிகள் பங்குபற்றும் இருதய நோய் நிபுணர்கள் மாநாடு

மாஸ்கோ, ஜூன் 30

இருதயநோய் நிபுணர்களது 9வது உலகமகாநாடு மாஸ்கோவில் ஆரம்பமாகியுள்ளது. உலக இருதயநோய்த்துறையில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததும் அதிகப் பிரதிநிதிகள் கலந்துகொள்வதும் இம் மகாநாடுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 67 நாடுகளிலிருந்து 4000 மருத்துவ விஞ்ஞானிகளும், நிபுணர்களும் இம் மகாநாட்டில் கலந்துகொள்கிறர்கள். 1000 சோவியத் விஞ்ஞானிகள் இதில் கலந்து கொள்வதும் குறிப்பிடத்தக்கது: இத்தாலி 560 பேரையும், அமெரிக்கா 400 பேரையும் மேற்குஜெர்மனி 2 0 பேரையும், பிரான்ஸ் 250 பேரயும, ஜப்பான் 200 பேரையும் அனுப்பியுள்ளது.

உலகின் தலைசிறந்த இருதய நோய் நிபுணர்கள் இம் மகாநாட்டில் 21 உரைகளை நிகழ்த்தவுள்ளனர். இத்துறையின் அடிப்படைப் பிரச்னைகள் குறித்து 800 ஆய்வுக கட்டுரைகளும் சமர்ப்பிக்கப் படவுள்ளன. அத்துடன் இம் மகாநாட்டையொட்டி ''கார்டியாலொஜி-82'' என்ற கண்காட்சியொன்றும் மாஸ்கோவில் இடம்பெறுகிறது. 200 அரசாங்க நிறுவனங்களும் இக்கண்காட்சியில் பங்குபற்றி இத்துறையிலான மிக நவீன மருத்துவசாதனங்களும் நவீன மருந்துகளும் இருதயநோய் வைத்தியத்துறையில் மிக முன்னேற்றமடைந்த நாடுகளில் இருந்து இக் கண்காட்சிக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

உலக இருதயநோய் வைத்தியத்துறையில் மிகமுன்னேற்றமடைந்த நாடுகளில் சோவியத்யூனியனும் ஒன்று இப்போது 14 இருதயநோய்க் கேந்திரங்கள் சகல குடியரசுகளிலும் உள்ளன. 1985ல் இதன் தொகை 70 ஆக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது 600 இருதயநோய் ஆஸ்பத்திரிகள் உள்ளன.

**மணிவாக்கு**

ஆண்மையளிப்பதே கல்வியின் லட்சியமாயிருக்க வேண்டும். மனிதனுடைய மனோசக்தியைத் தன்வயப் படுத்தி, தக்கதுறையில் செலுத்த உதவுவதே கல்வி எனப்படும்.

—சுவாமி விவேகானந்தர்

# நமது நோக்கு

## பெண்கல்வி

தமிழ்ப் பெண்களின் வளர்ச்சிக்கென சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சுமார் எழுபது வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் இராமநாதன் கல்லூரியை நிறுவினுர். சைவப்பெண்களின் கல்வி வரலாற்றில் இது ஒரு மைற்கல்.

இராமநாதன் கல்லூரியின் முதற்பரிசளிப்பு விழா 1915ல் நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அன்றைய மகாதேசாதிபதியும் சிந்தனையாளருமான சேர். றபட் சாமேர்ஸ் வழங்கிய கருத்து இன்றுமிகப்பொருத்தமாகக் காணப்படுகிறது.

''கிழக்குத் தேசங்களில் ஆண்களின் பண்பாடும் கல்வியும் மிகஉயர்ந்த நிலை அடைந்திருப்பதுஉலகறிந்த விடயம்; ஆனுல் பெண்களைப் பொறுத்த அளவில் உயர்கல்வி இன்னும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றது.''

''பெண்கள் – சைவப் பெண்கள் – தங்களுக்குரித்தான தேசிய சைவச்சூழலில் கல்வி பயிற்றப்பட வேண்டுமென்று இக் கல்லூரியை நிறுவிய சேர். ராமநாதன் பெருநோக்குக் கொண்டுள்ளார்; அது மிகவும் போற்றத்தக்கது; ஆனுல் பழமையான இலட்சியங்களைசெயற்படுத்தும் போது, அவற்றுடன் நின்றுவிடாமல் உலகில் எங்கும் காணப்படும் உயரிய கருத்துக்களை தனதாக்கிக் கொள்வதே மனித அபிவிருத்தியின் இரகசியமாகும் என்ற முடிவை மகா தேசாதிபதி வற்புறுத்தியிருக்கிறுர்.

இன்று 70 வருடங்களுக்குப் பின் சேர் இராமநாதனின் நாமத்தைககொண்டிருக்கும் இந்து மகளிர் கல்லூரி கொழும்பு மாநகரில் நிறுவப்பட்டுள்ளது; அது அரசாங்க பாடசாலையாகவே இயங்குகின்றது

இன்று பெண்கல்வி இந்து மகளிர் கல்வி–பற்றிய கருத்துக்கள் மிகப்கரந்தஅளவில் மாற்றம் பெற்று வருவது உயர்கல்வியை மையமாகக் கொண்டதின் விளைவு. கொழும்பில் வாழும் ஆயிரக்கணக்கான இந்துப் பெண்பிள்ளைகள் உயர் கல்விக்குத்தக்க வசதியின்றித் தத்தளிக்கின்றனர்.

இந்தப் பெரும் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ஜனுதிபதி ஜெயவர்தனவின் பேருதவியைக் கொண்டு காணிபெற்று, அதில் கட்டிடம் அமைத்து உதயமாகும் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் பெயர்தாங்கும் இக்கல்லூரி ஒரு தனித்துவமான குறிக்கோளைக் கொண்டுள்ளது; இந்தப் பணியில் தம்மைத் தியாகம் செய்யும் சைவ அபிமானிகளுக்கு எங்கள் மனமார்ந்த பாராட்டுக்கள்!

பெண்களுக்குரிய பிரத்தியேகமான கல்விமுறையோடு, விஞ்ஞானம், வர்த்தகம், தொழில் நுட்பத் துறைகளிலும் உயர்கல்வி பயின்று முன்னேற இக்கல்லூரி திட்டமிடுகின்றது; இதுவே இதன் முக்கிய அம்சம்; இன்றைய உலகின் அவசியதேவை.

அது மட்டுமல்ல. இந்து மகளிருக்கென அமைத்த வித்தியாலயமாஞலும் எச்சமயத்தவரும், எம்மதத்தினரும் இலகுவாக, ஒற்றுமையாகக் கல்வி கற்கும் சூழ்நிலை உருவாகுமென்பது எமது பூரண நம்பிக்கை; தேசிய மனப்போக்கு வளர இது வழிவகுக்கும்.

பெண்கள் விடுதலை இயக்கங்கள் தீவிரமாக உழைக்கும் இக்காலத்தில் பெண் கல்வியை–விசேடமாக இந்துப் பெண்களின் கல்வியை திரித்துத் தீவிரப்படுத்தும் செயல்களும் மலிந்துவருகின்றன; இவை பற்றிநாம் எச்சரிக்கையாகவிருக்க வேண்டும்.

மீண்டும் தேசாதிபதி சேர். றபட் சாமேர்ஸ் கூறிய சிந்தனையை நினைவு படுத்துவது நலம்.

''தங்கள் பழமையின் சிறட்டக்களை புறக்கணித்து ''கண்டதே காட்சி கொண்டதே கோலம்'' என்று வாழமுற்படும் மக்களுக்கு எதிர்காலம் சூனியமே!'' என்று அப்பெரியார் அன்று கூறிவைத்துள்ளார்.

பெண்கள் ஆண்களைப் போல 'சரிநிகர் சமானமாகக் கணிக்கப்பட வேண்டியவர்கள்; அதேசமயம் எத்தகைய திறமைசாலிகளும், இல்லற வாழ்க்கையில் புகுந்துவிட்டால், வீட்டின் அதிபதியென்ற பணியே–பெண்களின் முக்கியபணி; இதனை இன்று மறந்துநடக்கும் பெண் குலத்தோர், ஆயிரக்கணக்கில் அல்லற்படுகின்றனர். பாரதியாரின் புலமை நிறைந்த பாட்டுக்களை புரியமுடியாத மடமை புலப்படுகின்றது.

இல்லறம் சிறப்படைவதற்குப் புருஷனுடைய குணங்களைக் காட்டிலும் மனைவியின் நற்குணங்கள் முக்கியம். மனைவியின் குறைகள் இல்லறத்தைக் கெடுத்துவிடும்; கற்புடைய மனைவியே ஒரு குடும்பத்தின் பெருஞ்செல்வம் பூரண அன்பும், நம்பிக்கையும், பரஸ்பர பக்தியும் குடும்ப வாழ்வின் அசையாத அத்திவாரம்.

கல்வியில் நிபுணத்துவம் பெற்ற பெரும் பெண்மணிகளும் இல்லறம் புகுந்தால் இந்த இலட்சியத்துக்குக் கட்டுப்பட்டவர்களே! இதனை வற்புறுத்துவது இந்து தர்மம்.

இவ்வாறு கொள்வதால் ஒவ்வொரு பெண்ணும் விவாகம் செய்வதற்காகப் பிறக்கிறுள் என்று எண்ணுவது சரியன்று. பொது வாழ்வில் ஈடுபட்டு பொதுச் சேவைக்கென்றே தம்மை அர்ப்பணிக்கும் பெண்கள் இந்து சமுதாயத்தை விருத்தி செய்யவல்லவர்கள்; அவர்கள் அதிக அளவில் தேவைப்படுகின்றனர்.

பள்ளிக் கூடங்களையும், கல்லூரிகளையும்விட்டு வெளியேறியதும் பொம்மைகள் போல் ஆகி, குடும்ப வாழ்வில் மறைந்து விடுவதும் நல்லதல்ல.

அதற்கு நேர் மாறாக, தொழில் மோகத்தில் அடிமைப்பட்டு, வெளிநாடு செல்ல, உயர் உத்தியோகம் வகிக்க அதற்கேற்ற கணவனை அவசரப்பட்டு தேர்ந்தெடுக்க, இன்று பெண்கள் பெருமளவில் துணிந்துநிற்கின்றனர்.

பழைய உன்னதமான கொள்கைகளை உதறித் தள்ளி ஆத்மீகப் பலத்தை அடகுவைத்து, லௌகிக உயர்ச்சியைத் தேடும் பலர் மணமுறிவு, மனமுறிவு போன்ற பயங்கர விபத்துகளுக்குப் பலியாகின்றனர். இன்றைய உலகின் சோக வரலாறு இது!

எங்கு திரும்பினுலும் இத்தகைய துன்பக்காட்சிகள், இன்று கல்வி பயிலும் மகளிருக்கு ஒரு எச்சரிக்கையாக அமைய வேண்டும்.

சுதந்திரவாழ்வு கட்டுப்பாட்டில் தங்கியிருக்கிறது; இந்த உண்மை பெண் கல்வியில் பரிணமிக்க வேண்டியது மிக அவசியம்.

# கொழும்பு இந்து மகளிர் கல்லூரி திறப்புவிழா

''இந்துக் கல்லூரி சேர். பொன். இராமநாதனுகிய தேசியத் தலைவர் ஒருவரின் பெயரால் அழைக்கப்படுகின்றது. இதன் பிரதான கட்டிடப் பகுதியைத் திறந்துவைக்க மேன்மை தங்கிய ஜனுதிபதி அவர்கள் இசைவுதந்து வருகை புரிந்துள்ளது மிகப் பொருத்தமானதாகவும் நல்ல சகுனமாகவும் உள்ளது''.

இவ்வாறு கடந்த 25ம் திகதி கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்பவிழாவுக்கு வருகை தந்த ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவை வரவேற்று கல்லூரி அதிபர் திருமதி ஞா. புவனராஜன் பேசும்போது கூறினுர்.

''சேர். பொன். இராமநாதனின் அரசியல் வாழ்வுடன் தாங்களும், தங்கள் குடும்பத்தாரும் அதிகம் தொடர்புடையவர்களாய் இருந்துள்ளீர்கள் பெரும்பாலும் சிங்களவர்களைக் கொண்ட ஒரு தொகுதியில் 1910ல் சேர். பொன்னம்பலம் இலங்கையர் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்படுவதற்கு உங்கள் மாமனுர் ஹெக்டர் ஜயவர்த்தனவே பொறுப்பாகவிருந்தார்

மேற்படி விழாவையொட்டி வெளியிடப்பட்டுள்ள கல்லூரி மலருக்கு அளித்துள்ள செய்தியில் பின்வரும் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

''கொழும்பில் ஒரு தேசிய பௌத்த இந்துக்கல்லூரி ஸ்தாபிக்க வேண்டும். இப்பெரும் சமயங்கள் இரண்டு சங்கமிக்கும் இடமாக இருந்து இரு சமயத்தவர்களுக்கும் ஒரு பொது இல்லமாகவும் கோயிலாகவும் இக் கல்லூரி அமையவேண்டும் என்ற கருத்து இராமநாதன் அவர்களுக்கு 1890–ம் ஆண்டளவிலேயே தோன்றியது. இந்நோக்குக்காக ஆரம்ப நன்கொடையாக 25,000ரூபாவை அவர் கொடுத்தார் ஆனுல் ராபாசிய ஆதரவு இன்மையால் இந்நோக்கு நிறைவேறவில்லை. எமது கல்லூரி இந்து மகளிர்க்கென ஆரம்பிக்கப்பட்டாலும் மற்றைய மதத்தினரும் பரந்த யனப்பான்மையுடனும் தாராள சிந்தையுடனும் சினேகித சூழலில் கல்வி பயிலக்கூடியதாக இருக்கும்,''

### அமிர் கருத்து

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் விடுத்துள்ள செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:–

கொழும்பில் இந்து மகளிருக்கான ஒரு தனிக் கல்லூரி இல்லாத குறை நீண்டகாலமாகவே இருந்துவந்தது. இக்குறை நீங்க கொழும்பு வாழ் தமிழ் மக்கள் மேற்கொண்ட இடைவிடா முயற்சியின் பயனுய் அவர்களது நீண்டநாள் கனவு நிறைவேறியபோதும் தகுந்த கட்டடங்கள் இல்லாதமை பெரும் மனக்குறையாகவே இருந்தது. அக்குறையை போக்க இன்று ஒரு கட்டடம் முழுமை பெறுகிறது படிப்படியாக ஒன்று பலமாகி முழுமைபெற கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தினரின் பணி இன்றியமையாதது.''

### நீதி அமைச்சர் செய்தி

நீதியமைச்சர் டாக்டர் நிஸங்கா விஜயரத்ன விடுத்துள்ள செய்தியில்; என்னுல் ஏற்படுத்தப்பட்ட பாடசாலை அபிவிருத்தி சபைகள் கல்வி வளர்ச்சிக்காக ஆர்வத்துடன் பணியாற்றி வருவதைப் பார்க்கையில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் கொழும்பில் சேர். இராமநாதன் பேரில் இந்து மகளிர் கல்லூரி ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்றும், அதற்கென காணி ஒன்றையும் எடுக்கத் தீர்மானித்தது மிகவும் பொருத்தமான தீர்மானம். எமது எதிர்பார்ப்புகள் பூர்த்திபெறுவதைக் காண்பது மிகவும் மகிழ்ச்சி தருகின்றது என்றுர்.

### கல்விச் சேவைகள் அமைச்சர்

கல்விச் சேவைகள் அமைச்சர் திரு. லயனல் ஜயத்திலக்க தமது செய்தியில்:

பெற்றோரின் நீண்டகால தேவையொன்றை அரசாங்கம் நிறைவேற்றியிருக்கின்றது. ஆரம்ப நிலையிலேயே இருந்தாலும் இக் கல்லூரி நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளது. மிக விரைவிலேயே நாட்டிலுள்ள சிறந்த கல்லூரிகளில் ஒன்ருக அது வளரும் என்று எதிர்பார்க்கலாம் என்றுர்.

திரு. சிரங்கநாதன் கியூ. ஸி. விடுத்துள்ள செய்தியில்; கொழும்பிலும் அதன் சுற்றுவட்டத்திலுமுள்ள இந்து மகளிரின் முக்கிய தேவை ஒன்று இக் கல்லூரியின்மூலம் பூர்த்தியாகின்றது. கொழும்பில் இந்துப் பெண்களுக்கென பொதுப் பாடசாலையொன்று இருக்கவில்லை. சைவ மங்கையர்கழகம் தனியார் பாடசாலையாக இயங்கிவந்தது. குறிப்பிட்ட எண்ணிக்கையினரின் கல்வித் தேவைகளை சில இந்துப் பெண்கள் தமது அர்ப்பணித்த சேவையின் மூலம் நிவர்த்திசெய்து வந்தனர். ஏனைய இந்துப்பெண்கள்

(5ம் பக்கம் பார்க்க)

# இன்று அறிமுகம்

## சொக்கனின் 'நெடும்பா - 3'

இன்று முத்தமிழ் வெளியீட்டுக்கழகம் அறிமுகம்செய்யும், சொக்கனின் நெடும்பா–3 எழுத்துலகில் 'வெள்ளிவிழா' வும், இம் மண்ணுலகிற், பொன் விழா'வும் கண்டு மகிழ்ந்த 'சொக்கன்' 'பாரதி நூற்ருண்டு நினைவு'க்கெனப் படைக்கும் 'பயற்றம் பணியாரம்' இது.

'தமிழ் நாட்டுப் பற்றை நான் அறிந்த யாப்பில் அரைத்து, வடநாட்டுச் சர்க்கரையும் சேர்த்து உருட்டித் திரட்டிப் பின் பதம்பண்ணிப் பிடித்துப் பொரித்து எவர் சில்வர் பீளேட்டில் பரிமாறுகிறேன்' நெடும்பா 3 – 'படையல்' – பக். V என்கிறுர் அவர்.

'எளிய பதங்கள், எளிய நடை எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம் பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனுகின்றுன்' என்று மிக்க ஆற்ருமையோடு அங்கலாய்த்தவன் பாரதி. பாரதி நூற்ருண்டிலே பாரதியை நினைவுகூர்ந்து ஒன்றல்லமூன்று சிறுகாப்பியங்களைச் 'சொக்கன்' வெளியிட்டிருக்கிறுர். மூன்றும் மூன்றுவிதமானவை; மூவேறு சூழல்களைக் களமாகக் கொண்டு எழுந்தவை; பாரதி வேண்டிய எளிய பதங்கள், எளியநடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம் என்பவற்றிற்கும் மேலாகத் தாம் நுதலிய பொருள்களாலும் தனித்துவமிக்குத் தலைநிமிர்ந்து நிற்பவை.

மூன்று நெடும் பாக்களிலும் [நசிகேதன், ஒபியசு, மலர் விழி] முழுகி வெளிவரும் போது 'திரிவேணி'யில் புனித நீராடித் திரும்புகிற மன நிறைவு ஏற்படுகிறது. வடநாடு. தென்னுடு, மேனுடு என்பவற்றின் கலாசார சங்கமமாக இக் கவிதைத் தொகுப்பு விளங்குவதே அத்தகைய உணர்வு படிப்போர் உள்ளத்தில் ஏற்படுவதற்கான காரணமாகும்.

கடோபநிஷதத்தில் வரும் யமன், நசிகேதன் சம்வாதம் பிரசித்தமானது. வேள்வி, யமபதி, காட்சி, மூன்று வரங்கள், உபதேசம், உடல்எனுந் தேர், எதுபெரிது?, ஞானம், வீடு என்ற ஒன்பது உபதலைப்புக்கள் கொண்ட சிறுகாப்பியமாக இது இயற்றப்பட்டிருக்கிறது.

பௌராணிகர், நாடக திரைப்பட எழுத்தாளர் என்போரினது யமன் பற்றிய அதீத கற்பனைகளால் அலைப்புண்டிருக்கும் நமக்குச் 'சொக்கன்' அறிமுகஞ்செய்துவைக்கும் அறக்கடவுள் – யமன் — புதியவனுகவேயிருப்பான்.

நசிகேதன் யமன்முன் வருகிறுன்; அவனுடைய அநுபவம் எத்தகைது. இல் பொருள் உவமைகளைவைத்துக்கொண்டு 'சொக்கன்' அறக்கடவுளை அனைவருமே தரிசிக்கும்படி செய்துவிடுகிறுர்.

செந்தழலால் மூகஞ்செய்து
பனிப்பை ஊட்டிச்
சிற்றிதழில் முத்தேற்றிப்
பவளம் பூசிச்
சிந்தைஎழும் அறிவுசுடர்
விடுதற் கென்றே
செய்திட்ட விழியிடத்தே
கனிவைச் சேர்த்து
வந்தஅறக் கடவுள்...'

'உபதேசம்' முதல் 'ஞானம்' ஈருக அமைந்த பகுதிகள் வேதாந்த தத்துவத்தினை மிகத் தெளிவாக விளக்குகின்றன.

புறநானூறு 278ஆம் 279ஆம் பாடல்களிற் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் செய்திகளை விரித்துத் தமது

(5ம் பக்கம் பார்க்க)

# ரமழான் சிந்தனை

''எவன் வாந்தி (சத்தி) எடுத்தானே அந்த நோன்பு அவன்மீது களாவாகாது. எவன் வேண்டுமென்று வாந்தி எடுத்தானே அவன்மீது களாச் செய்வதுகடமையாகும்.''

ஸஹர்முபு 4–23

நோன்பு திறக்கும் நேரம் 6–29·

தொகுப்பு:
சுல்பிகா–கௌது

கல்லூரிக்கருகில்

# டியூட்டரிகள் மாணவர் ஒழுக்கத்தைக் கெடுக்கும்

[கரவெட்டி]

''கல்லூரிகளுக்கு அருகாமையில் ரியூட்டரிகள் இயங்குவதனால் கல்லூரி மாணவர்கள் மத்தியில் ஒழுங்கீனங்கள் உருவாகி வருகின்றன. இந்த நிலை நீடிக்குமேயானால் பாடசாலை மாணவர்களிடையே ஒழுங்கு, கண்ணியம், கட்டுப்பாடு என்பன அருகிக்கொண்டே போகும்''.

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. கே குணரத்தினம் அம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அதிபர் குணரத்தினம் மேலும் பேசுகையில், பாடசாலை அபிவிருத்தியைப் பொறுத்தமட்டில் பழைய மாணவர்கள் சிறந்த பங்காற்றுவது பாராட்டப்படவேண்டியதாகும். இந்தப் பாடசாலை பழைய மாணவர்கள் பிரார்த்தனை மண்டபம் நிறுவவேண்டுமென்று கண்ட கனவு இன்று நனவாகிவிட்டது. இம்மண்டபம் இயங்கத் தொடங்கியதும் இப்பகுதியில் கலை கலாச்சாரம் துரித கதியில் முன்னேறும் என்பதில் ஐயமில்லை.

இன்று பெரிய கல்லூரிகளுக்கு அருகாமையில் ரியூட்டரிகள் இயங்கி வரும் நிலை உருவாகி வருகிறது. இந்த நிலைவால் பாதிக்கப்படுவது பாடசாலை மாணவர்களே என்பதை பெற்றோர் மறந்துவிடக் கூடாது. கல்லூரிகளுக்கு அருகில் ரியூட்டரிகள் இயங்குவதால் மாணவர்கள் பாடசாலை வரவிலும், ஆசிரியர்களைக் கனம்பண்ணல் போன்ற நடவடிக்கைகளிலும் ஒழுங்கீனமாகக் காணப்படுகின்றனர். இந்த நிலை நீடிக்கவிடக் கூடாது'' என்றார்.

# நச்சுக்காய் தின்று மாணவி மரணம்

(மட்டக்களப்பு)

தந்தையார் தனது காதலுக்குக் குறுக்கே நின்றதால் நிர்மலா என்ற 19 வயது மாணவி நச்சுக்காய் ஒன்றை உண்டு தற்கொலைசெய்து கொண்டார்.

இச்சம்பவம் மட்டக்களப்புப் பகுதியிலுள்ள கல்லடி என்ற இடத்தில் இடம்பெற்றது. தற்கொலைசெய்துகொண்டவர் மட்டக்களப்பிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் உயர்தர வகுப்பில் கல்விகற்று வந்தவராவார்.

மரண விசாரணையின் போது இறந்தவரின் தந்தையாரான சீனித்தம்பி என்பவர் சாட்சியமளிக்கையில் காலமான நிர்மலா தமது ஏழுபிள்ளைகளில் ஓரேயொரு பெண் பிள்ளையாவாரென்றும் சில காலமாக மாணவரொருவருடன் இவர்தொடர்புவைத்திருந்ததைத் தாம் அறிந்து, படிப்பைத் முடித்தபின்னர் உனக்கு நல்ல இடத்தில் திருமணம்செய்துவைப்பதாகப் புத்திமதி கூறியதாகவும், ஆனால் அவர் அதற்கு மறுத்து அப்பையனையே தான் விரும்புவதாகத் தெரிவித்துவந்ததாரென்றும், சம்பதினம் நிர்மலாவின் நடத்தையில் ஐயங்கொண்டு தாம் அவரை அடித்ததாகவும், பின்னர் மாலையில் அவர் கடற்கரைக்குச் சென்று வீடு திரும்பியபின்னர்தான் நச்சுக்காய் ஒன்றை உண்டதாகத் தெரிவித்ததையடுத்து தாம் உடனேஅவரைவைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றபோது அங்கே அவர் மரணமானார் என்றும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மரணவிசாரணை அதிகாரி திரு. த. இவநாதன் விசாரணையை மேற்கொண்டு தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். (கி)

இளம்பெண் தடுத்துவைக்கப்பட்ட சம்பவம்

# யுவதி கற்பிணிஎன்று வைத்திய அதிகாரிஊர்ஜிதம்

(மாவிட்டபுரம்)

யுவதி ஒருவரை பலாத்காரமாக தடுத்து வைத்துள்ளதாக கூறப்படும் விவகாரம் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சமயம் சம்பந்தப்பட்ட யுவதி 2 மாதக்கர்ப்பிணி என்பதை யாழ். சட்ட வைத்திய அதிகாரி ஊர்ஜிதம் செய்து அறிக்கை சமப்பித்தார்.

சுழிபுரத்தைச்சேர்ந்த கே. சின்னையாஎன்பவர்ரியூசனுக்கு சென்ற தமது மகளை உடுவிலைச் சேர்ந்த ஏ. ரவிக்குமார் சுன்னாகத்தைச்சேர்ந்த ந. கிருஷ்ணராஜா ஆகியோர் பலாத்காரமாகக் கடத்திச்சென்று தடுத்து வைத்துள்ளதாகவும், அவரை மீட்டுத்தருமாறும் கோரி அப்பில் நீதிமன்றத்தில் செய்த விண்ணப்பத்தை அடுத்து இதுபற்றி விசாரித்து யுவதி பற்றி தீர்மானிக்குமாறு மல்லாகம் நீதிமன்றத்திற்கு அப்பீல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதற்கமைய இதில் சம்பந்தப்பட்டவர்கள் மல்லாகம் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைசெய்யப்பட்ட சமயம் யுவதி தாம் தமது காதலன் ரவிக்குமாருடனேயே இருப்பதாகவும் தாம் 2 மாத கர்ப்பிணி என்றும் தெரிவித்தார்.

இதனையடுத்து யுவதியின் [blot]த இவரைக்கர்ப்பிணியா? என அறிவதற்கு வைத்திய பரிசோதனைக்குட்படுத்த வேண்டுமென கோரியதால் இந்த யுவதியை கர்ப்பிணியா எனப் பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். சட்டவைத்திய அதிகாரிக்கு நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இவ் விவகாரம் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சமயம் யாழ். சட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ், சுப்பிரமணியம் வைத்திய அறிக்கையை சமர்ப்பித்தார். அதில் இந்த யுவதி 2 மாதக் கர்ப்பிணியே என்பதை அவர் ஊர்ஜிதம் செய்திருந்தார்.

இதனையடுத்து யுவதியின் தந்தையின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம். மோதிலால் நேரு இவ்விடயத்தில் தீர்மானம் எடுப்பதற்கு முன் தந்தையின் சாட்சியத்தை பதிவு செய்யவேண்டுமெனவும் அதனை நீதிமன்றம் ஆராய்ந்தபின் யுவதிபற்றி தீர்மானிக்கலாமெனவும் தெரிவித்தார்.

இதனை யுவதியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆட்சேபித்தார். யுவதி நீதிமன்றத்திலேயே தமது நிலையை தெளிவாக விளக்கியிருக்கும் போது வேறுசாட்சிகள் தேவையில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

இறுதியில் தந்தையின் சாட்சியம் அவசியமா? என்பதைத் தீர்மானிப்பதற்காக நீதிபதி திரு. சீ. வி விக்னேஸ்வரன் இவ்விசாரணையை ஒத்திவைத்தார், (க)

## இன்று

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

கற்பனைக் கண்கொண்டு கண்டு சொக்கன்' யாத்திருக்கும் காவியக்கவி 'மலர்விழி'.

தண்டியலங்காரச் சூத்திரப் படிகூடக் காப்பியம் என்று கொள்ளத்தக்க விதத்தில் நாட்டு வருணனை, ஆற்று வருணனை, இருசுடர்த்தோற்றம், மறைவு நன்மணம்புணர்தல் என்ற அங்கங்களெல்லாம் அமைய இக் காப்பியம் பாடப்பட்டுள்ளது.

இருபத்தொன்பது பிரிவுகளைக்கொண்டதாக வளர்ந்து செல்லும் இக் காப்பியம் பொருளமைதியாலும் யாப்பமைதியாலும் சிறந்து விளங்குவதோடு பாரதியின் 'பாஞ்சாலி சபதம்'போல் இக்கால கட்டத்தின் முக்கியதேவையை நிறைவுசெய்வதாகவும் அமைவது குறிப்பிடவேண்டிய சிறப்பு அம்சமாகும்.

வெண்ணெய் திரளும் போது தாழி உடைந்தது போல இறந்த பனைவியைத் திரும்பப் பெற்றும் நிபந்தனைப்படி நடக்கத் தவறியதால் இழக்க நேர்ந்த அபாக்கியவானை இசைமேதை ஒபியசுவின் கதை அரியதொரு சோக சித்திரமாகத் தீட்டப்பட்டிருக்கிறது. கதை முடிவில் கவிஞருடன் நமக்குமே.

'இந்த அபாக்கியவான் போலொருவன்
வந்துபிறக்காவழியருள்வாய் ஈசனே'

என்று பிரார்த்திக்கவே தோன்கிறது.

காலத்தின் தேவையை நிறைவுசெய்யும் கண்ணியம் மிக்க படைப்புக்கள்.

நெடும்பா-3 தந்த சொக்கன் தமிழ்கூறு நல்லுலகத்தின் பாராட்டுக்குரியவர்.

-க. உமாமகேஸ்வரன்.

## கொழும்பு இந்து...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

இந்து சூழ்நிலையில் தமது கல்வியைப்பெறவும் உயர் கல்வியைப் பெறவும் முடியாமல் இருந்தது. இந்த விவரம் தெரியவந்தவுடன் மாண்புமிகு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் இந்த அருமையான காணியை இக் கல்லூரி பெறவும் ஏனைய வசதிகள் கிடைக்கவும் ஆர்வத்துடன் நடவடிக்கை எடுத்துதவினர் என்று குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு இந்து கல்வி சங்கத்தின் தலைவர் திரு. கே. சி தங்கராசா தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

கொழும்பிலுள்ள இந்துப் பெண்களின் கல்விக்கு உதவும் முகமாக கொழும்பு மேற்கு எம். பி. யாக திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் அளித்த வாக்குறுதி இன்று பூர்த்தியாகின்றது. சைவ மங்கையர் கழகம் போன்ற தனியார் கல்வி நிறுவனங்களின் தயவிலேயே இந்து சூழ்நிலையில் கல்விபெற்றுவந்த இந்து மகளிருக்கு சுமார் பத்து லட்சம் ரூபாய் பெறுமதியுள்ள இக் கட்டிடத்தையும் காணியையும் நிதிநெருக்கடியான இந்தக் காலகட்டத்தில் பெற்றுத் தந்திருப்பது கொழும்பு வாழ் இந்து சமூகத்தின் கல்வி வளர்ச்சியில் மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகின்றது.

இந்த மேன்மையான கைங்கரியத்தில் அரசு அளித்துள்ள பங்களிப்பும், கல்லூரியை மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் திறந்துவைப்பதும் இந்த நாட்டில் மீண்டும் அமைதியும் அபிவிருத்தியும் ஏற்பட அவசியமாகிய சமய சௌஜன்யத்துக்கும் பரிவுணர்வுக்குமான அத்தியாயம் உருவாகுமென நம்புகிறேன். (பெ)

முள்ளியான் ஆஸ்பத்திரியில்

# யாழ். அரசாங்க அதிபருக்கு கிடைத்த அதிர்ச்சி

(புலோலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆராயுமுகமாக அப்பகுதிக்கு விஜயம் செய்த அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தலைமையிலான கோஷ்டி முள்ளியான் அரசினர் வைத்தியசாலைக்கு சென்றபோது பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியது.

அங்கு சென்றபோது வைத்தியசாலை டாக்டரோ ஊழியரோ அங்கு காணப்படவில்லை. வைத்தியசாலையும் பூட்டப்பட்டிருந்தது. வௌவாலின் கழிவுப்பொருட்களின் நாற்றம் வீசிக்கொண்டிருந்தது.

இக்குழுவினரின் வருகையைக் கண்ட அயலவர்கள் வந்து தமது வைத்தியசாலையின் சேவைக் குறைபாட்டைப் பற்றிக் குழுவினரிடம் புகார் செய்தனர்.

அரசாங்க அதிபரும், பருத்தித்துறை எம். பி திரு. கே. துரைரத்தினமும் இவ் வைத்தியசாலையைச் சிறப்பாக இயங்குவவற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அவ் அயலவர்களிடம் உறுதியளித்தனர். [க]

கோடியில் பதுங்கியிருந்து

# தாலிக்கொடி அறுக்க திருடர்முயற்சி

[யாழ்ப்பாணம்]

வீட்டின் கோடியில் பதுங்கியிருந்து தாலிக்கொடிபறிக்க முயன்ற திருடர்களது முயற்சி தோல்வியில் முடியவே தப்பி ஓடிவிட்டனர்.

திங்கட்கிழமை இரவு மண்டைதீவில் உள்ள ஒருவரது வீட்டில் நடந்த இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிசில் செய்யப்பட்ட முறையீடு சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

திரு. வெ. அமிர்தலிங்கம் என்பவரால் செய்யப்பட்ட இந்த முறையீட்டில் திருடர்கள் இருவர் இரவு நேரம் வீட்டின் பின்புறமாக நின்று சத்தம் எழுப்பினர் என்றும் என்னவென்றுபார்ப்பதற்காக திருமதி அமிர்தலிங்கம் வெளியே சென்ற போது இருவர் அவரது கழுத்தில்பிடித்து தாலிக்கொடியை அறுக்கமுயன்றதாகவும், இச்சந்தர்ப்பத்தில் அவரின் குரல் கேட்டு வீட்டில் உள்ளவர்கள் ஓடியபோது திருடர்கள் ஓடிவிட்டதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். பொலிசார் சந்தேகநபர்களைத் தேடிவருகின்றனர்.

(வண்-நிரு)

## நூலகர்கள் இடமாற்றம்

(புலோலி)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை புலோலி உப அலுவலக பொதுசன நூல் நிலையத்தில் நூலகராகக் கடமையாற்றிய திரு. கே. பரமேஸ்வரன் அச்சுவேலி உபஅலுவலக பொதுசன நூல்நிலையத்திற்கும், அச்சுவேலிஉபஅலுவலக பொதுசன நூல்நிலையத்தில் நூலகராகக் கடமையாற்றிய திரு. எஸ். ஸ்ரீவரதலிங்கம் புத்தூர் உப அலுவலக பொதுசன நூல் நிலையத்தில் நூலகராகக் கடமையாற்றிய செல்வி. வத்சலா குமாரசாமி யாழ் மாநகரசபை பொதுசன நூல் நிலையத்திற்கும், யாழ். மாநகரசபை பொதுசன நூல்நிலையத்தில் கடமையாற்றிய திரு. ம. குணாளன் புத்தூர் உபஅலுவலக பொதுசன நூல்நிலையத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். புலோலி உப அலுவலக பொதுசன நூல்நிலையத்தை திரு சு. திருச்செல்வம் பொறுப்பேற்றுள்ளார். புலோலி உபஅலுவலகத்தில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. வே. தா. கந்தசாமி இளைப்பாறியுள்ளார்.

(க)

## கல்லூரி பிரார்த்தனை மண்டபம்

(கரவெட்டி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் உருவாக்கப்பட்டுள்ள பிரார்த்தனை மண்டபம் அடுத்த மாதம் 8-ம் திகதி மாலை திறந்துவைக்கப்படவுள்ளது.

இம் மண்டபத்தை உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்துவைப்பார்.

நவீன முறையில் 10 லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள பிரஸ்தாபமண்டபத்திற்கான நிதியை உடுப்பிட்டி எம். பி. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் இருந்து ஒதுக்கி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. சுமார் மூன்று லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கடந்த 27 ம் திகதி சாந்திப் பூசையுடன் ஆரம்பமாகி செவ்வாய்கிழமை எண்ணெய் காப்புச் சாத்தல் வைபவம் இடம்பெற்றது. புதன் கிழமை மாக கும்பாபிஷேகமும் நடைபெற்றது. தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடந்து இறுதி நாளன்று மண்டலாபிஷேகம் பூர்த்தி விழாவும், தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும்.

ஆலயத்தின் சிற்பவிக்கிரகம் விமானம் முதலியவற்றை கோண்டாவில் மேற்கு சிற்ப கலாமணி திரு. நா. சோமசுந்தரஸ்தபதி செய்து முடித்தார்

[அரி. நிருபர்]

## கோரிக்கை

[நெடுந்தீவு]

நெடுந்தீவில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுமாறு யாழ். மாவட்டசபைத்தலைவர், யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, தீவுப்பகுதிப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோருக்கு நெடுந்தீவு கிழக்கு கிராமோதயசபைத் தலைவர் திரு நா. இராமச்சந்திரன் மத்தி தலைவர் திரு. க. அந்தோனிப்பிள்ளை, மேற்கு தலைவர் திரு. சிவ. சங்கரப்பிள்ளை ஆகியோர் கூட்டாக அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். கஷ்டப்படும் மக்களுக்கு முடிந்த அளவு உதவி அளிக்கக்கூடியதாக சமூக சேவைப் பகுதி வழங்கும் நீர் விநியோகத்துடன் மேலதிகமாக நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நாளொன்றிற்கு 250 கலன் நீரை இலவசமாக விநியோகிக்க ஏற்பாடு செய்துள்ளதாக அதன் தலைவர் திரு. இராமச்சந்திரன் கூறியுள்ளார்.

## மரக்கடத்தல் வழக்கு:

# 7 எதிரிகளும் தலா ரூ. 2000 பிணையில் செல்ல அனுமதி

### 3 லொறிகள் பாதுகாப்பில்

(சாவகச்சேரி)

களவாகக் காட்டு மரங்கள் அரிந்த பலகைவகைகள். திராந்திகள் என்பவற்றை நெல்லு மூட்டைக்குள் மறைத்து வைத்துக்கொண்டுவந்த குற்றச்சாட்டின்பேரில் 3 லொறிகள் நீதிமன்றபாதுகாவலில் வைக்கப்பட்டது. 7 எதிரிகளும் தலா 2000 பிணையிற்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வழக்கு மாவட்ட நீதிபதி எம். எச். காரியப்பர்முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இளையதம்பி கணேசலிங்கம், ஏகாம்பரம், அருணாசலம் துரைராசா, கந்தையா, செல்வராசா, கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம், சின்னத்துரை மரியநாயகம் ஆகியோர் மரங்களை கொண்டுவரும்போது கிளிநொச்சி வன பரிபாலனப்பகுதியினரால் கைது செய்யப்பட்டனர். எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள், எஸ். சுரேந்திரன், சீ. பாலக்கிருஷ்ணர், செ. அம்பிகைபாலன் ஆகியோர் ஆஜராகினர்.

நீதிபதி யூலை மாசம் 6ம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார். (க)

## சைக்கிள் திருட்டுவழக்கு சந்தேகநபர் றிமாண்டில்

[சாவகச்சேரி]

சாவகச்சேரி சந்தையில் பூட்டிவைத்த சைக்கிளை திருடியதாக கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்ட சந்தேகநபர் றிமாண்டில் வைக்கப்பட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில்விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில் உருத்திரபுரம் இலட்சுமி பேக்கரி 27ம் இலக்கத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் கனகராசா என்பவர் கச்சாய் வாசியாகிய கந்தையா வேலுப்பிள்ளைக்குச் சொந்தமான சைக்கிளை 82 ஜூன் 24ல் திருடிச் சென்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரியை மன்றில் ஆஜர் செய்தபோது நீதிபதி அவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டுத் தொடர் விளக்கத்தை அடுத்தமாதம் 7ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (க)

## நிர்வாக சேவைக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

கடந்த வருட இறுதியில் இலங்கை நிர்வாக சேவைக்கு பட்டதாரிகளைச் சேர்த்துக கொள்வதற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி, இலங்கை நிர்வாக சேவை தரம் இரண்டிற்கு திரு. செ. இன்பஜோதி நித்தியராஜ் தெரிவுசெய்யப் பட்டுள்ளார். இம்முறை இச்சேவைக்கு தெரிவுசெய்யப்பட்ட 56மாணவர்களுள் இரு தமிழ் மாணவர்களில் இவரும் ஒருவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் பழைய மாணவரும் களனி பல்கலைக்கழகப் பட்டதாரியுமான இவர் சுங்க இலாகாவில் சுங்க அதிகாரியாகவும் கட்டு நாயக்கா விமான நிலையம், தலைமன்னார் துறை ஆகிய இடங்களிலும் சேவை செய்து தற்போது கொழும்புத்துறைமுகத்தில் கடமையாற்றி வருகிறார். இவர் இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர் திரு. சி செல்லப்பு தம்பதிகளின் புதல்வராவார்.

### பிள்ளைகளின் எதிர்காலம்

## "பெற்றோர் சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும்"

(சங்கானை)

"பிள்ளைகளைப் பூரண பிரஜைகளாக்குவது கல்வித் திணைக்களத்தின் கடமை. வருடாவருடம் பள்ளிப்பிள்ளைகள் மத்தியில் போட்டிகளை நடாத்தும்பொழுது தங்கள் ஆற்றல்களை அவர்கள் வெளிப்படுத்துகின்றனர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திட்டத்தை வகுத்துக்கொள்ளலாம்".

இவ்வாறு சங்கானை பாரதி மைதானத்தில் நடைபெற்ற சிவப்பிரகாச மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பிரதம கல்வியதிகாரி ஜனாப் எம். எம். மன்சூர் உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்குதொடர்ந்து பேசுகையில் பள்ளுக்கூடங்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் பணஉதவி பொருள் உதவி போல பெற்றோர் மட்டுமல்லாமல் அவ்வப் பிரதேசங்களிலுள்ள நலன் விரும்பிகள் பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் சேர்ந்து வித்தியாலயத்தின் வளர்ச்சியை மேம்படச் செய்வதற்கு தற்போது நல்லதொருசந்தர்ப்பம்ஏற்பட்டிருக்கிறது. அதைச் செவ்வனே பயன்படுத்திவித்தியாலய வளர்ச்சிக்கு ஆர்வம் ஊட்டுதல் வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். வித்தியாலய அதிபர் திரு எம். கே. சிவபாதலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். இளைப்பாறிய அதிபர் திரு பொ சிவகுமங்கள விளக்கேற்றி வைத்தார்.

இப்போட்டிகளில் கடந்த வருடம் முதலிடத்தைப் பெற்ற பாரதிஇல்லம் (பச்சை) இவ்வருடமும் முதலாவது இடத்தைப்பெற்றது. வள்ளுவர் இல்லம் (நீலம்) இரண்டாவது இடத்தையும் இளங்கோ இல்லம் (சிவப்பு மூன்றும் இடதைத்யும் பெற்றன.

ஜனாப் மன்சூர் பரிசில்களை வழங்கினார்.

## கருத்தரங்கு

[புலோலி]

பருத்தித்துறைசிவன்கோவில் முன்றலில் வடமாராட்சி கல்வி வட்டத்தால் ஒழுங்குசெய்யப் பட்ட "பல்லவர் சோழர் காலப் பத்திநெறி" பற்றிய கருத்தரங்கொன்று நாளை கல்விவட்டாராத்தலைவர் திரு மு பொ. வீரவாகு தலைமையில் நடைபெறவுள்ளது.

## ஒரு..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

திங்கட்கிழமை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது.

டொமினிக் ஜீவாவின் இந் நூலைப்பற்றிய அறிமுகவிழாவுக்கு திரு. நந்தி தலைமைதாங்குகின்றார். திரு. க. கைலாசபதி திரு. நா. சுப்மரமணிய ஐயர் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவார்.

## கீழ் மட்டத்து...

(3-ம் பக்கத் தொடர்ச்சி]

தாவது: "நூலாசிரியரின் நாவல் ஒருவரலாற்று நாவல் சமீபகாலத்தில் நடந்த இலக்கவரலாறு சித்தரிக்கப்பட்டிருக்கிறது. சாதிக் கொடுமைகளை எதிர்த்து அவர் இயக்கத்தில் ஈடுபட்டவர் இயக்கம் எவ்வாறு செயல்பட்டதென்பதையும், இயக்கம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதையும் அவர் நூலில் கூறியுள்ளார். சாதி ஒழிப்பு இயக்கத்தை தீவிரமாக இயக்க எவ்விதம் நடக்கவேண்டும் என்பது நூலில் காட்டப்பட்டுள்ளது.

தஞ்சைநகர் காமராஜ் காங்கிரஸ துணைத்தலைவா திரு. ஏ. ராமமூர்த்தி கூறியதாவது:

இந்நூல் வெளியீட்டு விழா வரலாற்றுப் பெருமைமிக்க பொருள் பொதிந்த விழாவாகும் கிடைக்கக்கூடிய நல்ல நாவல்களையும் படிக்கக்கூடிய வாய்ப்பு இல்லாத போதும், 'பஞ்சமர்' நூலைத் தொடர்ந்து படித்தேன் ஆரம்பத்தில் அதனை விளங்கிக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்ட போதும், பிற்பகுதி விறுவிறுப்பாக படிக்கக்கூடியதாக இருந்தது. இங்குள்ள சூழலுக்கு ஏற்றவாறு மாற்றத்தை ஏற்படுத்த உதவக்கூடிய விதத்தில் இயக்கத்தை. தொடர்ந்து துணைபுரிய, நூலாசிரியர் நல்ல நாவலை தமிழகத்தில் உருவாக்கி தருவாரானால் அது பெரும் பயனுள்ளதாக இருக்கும்

பேராசிரியர் பாரதிபித்தன் தலைமைவகித்து பேசுகையில் கூறியதாவது:

உண்மை நாவல் சத்தியத்தைச் சொல்கிறது உண்மைக் கருத்தைச் சொல்லிவிடுவது இலக்கியமாகிவிடாது அவற்றிற்கென்று சில கற்பனை வடிவம் தேவை. அதில்கண் உண்மைகள் நாவலாகிவிடும்.

எந்த இயக்கத்திற்கும் பலாத்காரம் ஒரு லட்சியமில்லை பலாத்காரம் ஒரு வழிமுறையாகும் குறிப்பிட்ட இயக்கத்தின் வழிமுறைதான் அது. இந்த நூலில் இயக்கம் பற்றி எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

திரு. விஸ்வநாதன், திரு. குமாரசாமி ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர். நூலாசிரியர் திரு கே. [illegible] நன்றி கூறினார். (க]



வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
சட்டம் என்கையில்

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-ஜெயசுதா
பந்தாட்டம்

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கு நாகேந்திர மடம் இலந்தைத்தாழ்வு ஸ்ரீ முருகப்பெருமான் கோவில் வருடாந்த சங்காபிஷேகம் 3-ந் திகதி சனிக்கிழமை காலையில் நடைபெறும்.

இரவு விசேட நிகழ்ச்சிகளாக ஆர். புண்ணியமூர்த்தி குழுவினரின் மேளக்கச்சேரியும் 'சின்னமணி' கோஷ்டியினரின் 'வள்ளிதிருமணம்' பற்றிய வில்லுப்பாட்டும் நடைபெறும். இதன்பின்னர் முருகப்பெருமான் வீதிவலம் வருவார்.

ஸ்ரீதர் (யாழ்.நகர்)
10-30, 2-30, 6-30, 9-30
கமலஹாசன்-சோபா-பிரதாப் நடித்த
அழியாத கோலங்கள்

Windsor (Jaffna)
Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30 P. M.
BRUCE LEE in
THE GAME OF DEATH
(Color)
உலக சாம்பியன் புரூஸ்லியின் பயங்கரமான கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

றீகல் யாழ்நகர் தினசரி 10-30, 2-30, 6-15 9-30
2-வது ஜனத்திரள் வாரம்
சிவாஜி, கீதா குமாரசிங்கா, ஜெயபாரதி
மோகனப் புன்னகை

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வெற்றி முரசுகொட்டும் 2-வது மாதம்
கார்த்திக்-ராதா-தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
கமலஹாசன்
ராஜபார்வை

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45

6-வது வெற்றி வாரம்
கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா,
தங்கவேலு, நாகேஷ்.
கடல் மீன்கள்
—கலர்—

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
வெற்றிகரமான 8வது வசூல் வாரம்
✶ ரஜனிகாந் ✶ சுஜாதா ✶ விஜயன்
✶ கராத்தே மணி ✶ ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

ராணி (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
நடித்த
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

### உலக கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டி:

# அவதானியாகக் கலந்துகொள்ளும் முதல் இலங்கையர்



(யாழ்ப்பாணம்)

பிரபல உதை பந்தாட்ட வீரரும், அம்பலாங்கொடை உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமானதிரு. த.பேரின்பநாயகம் ஸ்பெயினில் நடைபெற்று வரும் உலகக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டிகளைப் பார்வையிட இலங்கையின் சார்பில் இன்று மட்றிட் பயணமாகின்றார்.

பொலிஸ் மா அதிபரின் பணிப்பின் பேரில் இவர் பொலிஸ் விளையாட்டுக்கழகப் மார்வையாளராக உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளைப் பார்வையிடவிருப்பதுடன், இலங்கை விளையாட்டு அமைச்சின் உதைபந்தாட்டக் கட்டுப்பாட்டுச்சபை, இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம் ஆகியனவற்றின் உத்தியோகபூர்வ அவதானியாகவும் கலந்துகொள்ளுகின்றார்.

உலக கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப்போட்டிகளை இலங்கை அரசின் சார்பில் பார்வையிடும் முதல் இலங்கையர் திரு. த. பேரின்பநாயகம் என்பது குறிப்பிடத்தக்கது.

உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் திரு. த. பேரின்பநாயகம் இலங்கையின் பல சிறந்த உதைபந்தாட்டக்கழகங்களில் அங்கம் வகித்து உதைபந்தாட்டப் போட்டிகள் பலவற்றில் பங்குபற்றியுள்ளார். இலங்கையில் மட்டுமல்லாது உலகநாடுகள் சிலவற்றில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளிலும் இவர் மத்தியஸ்தராகப் பணியாற்றியுள்ளார்.

கடந்த பதினுன்கு வருடங்களாக சர்வதேச உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தில் திரு. த. பேரின்பநாயகம் அங்கத்தவராக இருந்து வருகின்றார்.

யாழ். கோவில் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. தம்பையா, திருமதி தம்பையா வின் புதல்வரான இவர் யாழ். பரமேஸ்வராக்கல்லூரியின் பழைய மாணவரென்பதும் குறிப்பிடத்தக்கது. (கி)

## கும்பாபிஷேகம்

[திருகோணமலை]

திருகோணமலை திரியாய் வரத விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமைகாலைநடைபெறுகிறது. கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மகாபிஷேகம், மாகாஆசீர்வாதம் மகேஸ்வரபூசை ஆகியன நடைபெறும் கல்வியங்காடு சிவஸ்ரீ அ நடராசக் குருக்கள் பிரதிஷ்டாசாரியாரக விருந்து கும்பாபிஷேகத்தை நிகழ்த்திவைப்பார்

## புலமைப்பரிசில் பெறத்தெரிவு

(அரியாலை)

பேராதனை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கலைப்பிரிவுக்கான முதலாவது வருடப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்ற மூன்று மாணவர்கள் புலமைப் பரிசில்பெறத்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கலைப்பிரிவில் கல்வி கற்கும் 715 மாணவிகள் தோற்றிய இப்பொதுப் பரீட்சையில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான செல்வி சொர்ணு ஆனந்தராஜன் புலமைப் பரிசில் பெறுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டிருப்பதுடன் 'காண்' ஞாபகார்த்த பரிசையும் பெற்றிருக்கிறார். சுண்டிக்குளி பரி. யோவான் கல்லூரியின் பழைய மாணவனை செல்வன் ஆர்.எஸ். கனகராஜனும், செல்வி புஸ்பா எக்கநாயக்காவும் புலமைப் பரிசில் பெற்ற மற்றைய மாணவர்களாவர்.

# போலிநோட்டுக்கள்

## சிங்கப்பூரில் அச்சடிப்பு!

(கொழும்பு)

போலி நூறுரூபா நோட்டுக்களை அச்சிட்டுவேளியிட்டுவந்த சிங்கப்பூர் அச்சகமொன்றையும்' அச்சிடும் யந்திரத்தையும் இலங்கைப் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

மேற்படி அச்சகத்தினூடாக வெளியிடப்பட்ட போலிநூறு ரூபா நோட்டுக்களே அண்மையில் புளக்கத்திலிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கப்பூரிலிருக்கும் இலங்கைத்தூதுவர், அதிர்ஷ்டலாபச் சீட்டுப் புத்தகமொன்றை இலங்கைக்கு அனுப்பிவைத்திருந்தார் என்றும் அப்புத்தகத்திலிருந்த சீட்டுக்களின் நிறம், தன்மை போன்றவை போலி நூறு ரூபா நோட்டுக்களை ஒத்தனவாகவிருந்தது என்றும் நுணுக்கமாக ஆராயப்பட்டபோது இலங்கைப் போலி நோட்டைப் போன்றே இருந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இன்ஸ்பெக்டர் திரு. அல்பிரட் செனிவரத்ன இதனைக் கண்டுபிடித்திருந்தார். இதனைத் தொடர்ந்து இலங்கைக் குற்றப் புலனாய்வுப் பகுதியைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் சிங்கப்பூர் சென்று பிரஸ்தாப சீட்டுக்களை அச்சிட்ட அச்சகத்தை நோட்டம்விட்டனர். அப்போது போலி நூறு ரூபாய் நோட்டுக்கள் அங்கே அச்சிடப்பட்டன என்பது தெரியவந்தது.

இலங்கையிலுள்ள சில வங்கி உத்தியோகஸ்தர்களின் உதவியுடனேயே போலி நோட்டு மோசடி இடம்பெற்றிருக்கின்றதெனத் தெரிவிக்கப்பட்டது.

சிங்கப்பூரில் கண்டுபிடிக்கப்பட்ட அச்சகத்தில் இலங்கையின் உண்மையான நூறு ரூபாத் தாளிருப்பது போன்ற வர்ணங்களையும், உள்ளடக்கங்களையும் அச்சிடக்கூடிய நவீன வசதியுடைய அச்சு இயந்திரமிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது மூலம் ஏனையஉலகநாட்டு நோட்டுக்களையும் அச்சிட முடியுமெனத் தெரிவிக்கப்பட்டது. (கி)

# "கிளிநொச்சித் தொகுதி அபிவிருத்தி பெற...

[கிளிநொச்சி]

''கிளிநொச்சித் தொகுதியின் அபிவிருத்தியில் போதிய அக்கறை எடுக்கப்படவில்லை. அபிவிருத்தியில் இப்பிரதேசம் மிகவும் பின் தங்கிய நிலையிலே உள்ளது. யாழ்ப்பாணமாவட்டத்தில் இத்தொகுதி இணைந்திருப்பதனால் எமக்கு இத் துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவேதான் நாம் தனிமாவட்டக்கோரிக்கையை வலியுறுத்தி வருகிறோம்.'' என்று கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலய அபிவிருத்திச்சபையின் வருடாந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் யாழ்ப்பாண மாவட்ட சபை வேட்பாளரும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் பிரமுகருமான திரு. இ. கிருஷ்ணராசா குறிப்பிட்டார். வித்தியாலைய அதிபர் திரு. கே. இராசேந்திரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. கிருஷ்ணராசா மேலும் பேசுகையில், ''வவனியா முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பகுதிகள் தனித்தனி மாவட்டம் ஆக்கப்பட்டதன் மூலம் டல்வேறு துறைகளிலும் துரித வளர்ச்சிபெற்றமுன்னேறி வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது கிளிநொச்சித் தொகுதி கல்வியில் அபிவிருத்தியில் இன்று பின் தங்கிய நிலையிலே உள்ளது. எத்தனையோ அபிவிருத்தித் திட்டங்கள் ஸ்தம்பித நிலையில் உள்ளன. இக்குறைபாடுகள் நிவர்த்தியாவதற்குள்ள ஒரே மார்க்கம் தனிமாவட்ட அமைப்புமுறை ஒன்றை உருவாக்குவதுதான்'' என்றார்.

கிளிநொச்சிக் கிராமோதய சபைத்தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் பேசுகையில் கல்வியில் கிளிநொச்சித் தொகுதி மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது என்றும் இங்கிருந்து ஒருவரும் பல்கலைக்கழகம் செல்லவில்லை என்றும்ஆசிரியர் பற்றுக்குறை பாரிய பிரச்னையாக உள்ளது. என்றும் கூறினார்.

உப அதிபர் திரு. எஸ். கோபாலபிள்ளை திரு. கே, சரவணபவான் உட்படப்பலர் பேசினர். கிளிநொச்சித் தொகுதியில் உள்ள தற்காலிக ஆசிரியர்களை நிரந்தரமாக்கவேண்டுமெனக்கல்வி அமைச்சைக் கோரும் தீர்மானமும் நிறைவேறியது.. (அ)

# சுயதொழில் பயிற்சிபெற்ற 65 பெண்கள்

(அரியாலை)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவினைச் சேர்ந்த மாதர் முன்னேற்றச்சங்கப் பிரதிநிதிகளான 65 படித்த இளம் பெண்கள் சுயதொழில் வேலைவாய்ப்புப் பயிற்சிபெற்று வெளியேறியுள்ளனர்.

வலி கிழக்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. எஸ். கிட்ணர் தலைமையில் திட்டமிடல் அதிகாரி திரு. சுவாமிநாதனின் அனுசரணையுடன் திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சின் மாதர் பணியகப் பிரிவு இப் பயிற்சிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. இப்பயிற்சியாளருக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எழுபத்திரண்டுவிரிவுரைகளை பல்வேறுதுறையைச் சேர்ந்த நிபுணர்களும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் நடத்தினர்கள்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயிற்சிபெற்றோர் சுய தொழில்களை ஆரம்பிக்கும் தகைமை பெற்றிருப்பதுடன் இவர்களது தொழில் முயற்சிகளுக்கு வங்கிக்கடனுதவி கிடைக்கவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சி வகுப்புக்கள் வலி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

# அதிசய ஓவியருக்கு பல்கலைக்கழகத்தில் பாராட்டு

## கண்காட்சி நாளை முடிவடையும்

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாடு சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியரான நுண்கலைக் கலைஞர் திரு. எம்.எம்.சண்முகத்துக்கு யாழ். பல்கலைக் கழகம் இன்று பிற்பகல் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்க இருக்கின்றது. இப்பாராட்டு விழா யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் மாணவர் அவைத் தலைவர் திரு. கே. என். இர்ாசநாயகம் தலைமையில் நடைபெறுகிறது.



யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் போராசிரியர் சு. வித்தியானந்தன், நுண்கலைக்கலைஞர் சண்முகத்துக்கு பொன்னாடை போர்த்திப் பாராட்டுரை நிகழ்த்துவார்.

பேராசிரியர் கா. இந்திரபாலா சிறப்புரையாற்றுவார்.



குருவி முட்டைக்குள் விநாயகப் பெருமானின் ஒன்பது ஓவியங்கள்.

### யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்.....

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நுண்கலைக்கலைஞர் திரு சண்முகம் முட்டைக்குள்ளும், அரிசியிலும் வரைந்த ஓவியக் கண்காட்சி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தினசரி காலை 9 மணி தொடக்கம் மாலை 9 மணிவரையும் நடைபெற்று வருகிறது.

பாடசாலை மாணவர்களும், பொதுமக்களுமாக ஏராளமானோர் கடும் வெயிலையும் பொருட்படுத்தாது, ஓவியங்களைப் வரிசையில் நின்று பார்த்துவருகிறார்கள். நாளை வெள்ளிக்கிழமை மாலையுடன் இந்த அதிசயமான முட்டைக்குள் ஓவியக் கண்காட்சி முடிவடையவிருக்கிறது.

### பாராட்டு

கண்காட்சியைப் பார்த்தவர்கள் நுண்கலைக்கலைஞர் சண்முகத்தை பாராட்டிச் செல்கின்றனர். திரு. விஷ்ணுசுந்தரம் அருள்சுந்தரம் ஏற்பாடு செய்துள்ள இந்த நுண்கலைக்கண்காட்சியிலிருந்து பெறப்படும் நிதி, யாழ். பொதுசன நூலக நிதிக்கு வழங்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது. [மா

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் சரவணமுத்து

அம்பலவாணர் சரவணமுத்து (ஓய்வு பெற்ற விஞ்ஞான ஆசிரியர். யாழ். இந்துக்கல்லூரி) காலமானார். இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும், லலிதா, சாந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும், லோகேஸ்வரனின் [நைஜீரியா] மாமனும், அ.பொன்னம்பலம், அ. வயித்திலிங்கம் ஆகியோரின் சகோதரரும், கே. சி. தங்கராஜாவின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று [1-7-82] வியாழக்கிழமை காலை 9 மணிக்கு 23/3A, லொறிஸ்வீதி பம்பலப்பிட்டி இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கனத்தை மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். 3716

## இத்தாலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

**747 விமானமொன்றை இலங்கையைச் சேர்ந்த 33 வயதான எக்கநாயக்கா சேபால என்ற இளைஞர் பலவந்தமாகக்கடத்தி பாங்கொக் விமான நிலையத்தில் இறக்கியுள்ளார்.**

இத்தாலியில் காவலிலுள்ள தமது மனைவியையும், மகனையும் தன்னுடன் சேர்க்கவேண்டும் என்றும் 3 லட்சம் டாலர் தமக்கு வழங்கவேண்டும் என்ற முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து இக்கடத்தலை அவர் நடத்தியுள்ளார்,

### துருப்புக்கள் காவல்

பாங்கொக் விமான நிலையத்தில் விமானம் இறங்கியதும், தாய்லாந்து துருப்புக்கள், விமானத்தை சுற்றிவளைத்துள்ளன. ஆனால் பலாத்காரத்தை பாவிக்கப்போவதில்லை என்று துருப்புக்கள் அறிவித்துள்ளன.

கடத்தல்காரர் 5அடி 7 அங்குல உயரமுள்ளவரென்றும் தாடி வைத்துள்ளாரென்றும் சிகப்பு ஷேர்ட்டும் ஜீன்சும் அணிந்துள்ளாரென்றும் அறிவிக்கப்பட்டது.

### கடத்தலில் பயிற்சி பெற்றவர்

லிபியாவிலும், கிரேக்கத்திலும் விமானக் கடத்தலில் பயிற்சி பெற்றதாக தாய்லந்து தொடர்புத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவரது உடலோடு குண்டுகள் கட்டப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருடைய நெஞ்சுப் பகுதியில் குண்டுகள் கட்டியிருப்பதென்பதற்கு அடையாளமாக சில கம்பித்துண்டுகள் நெஞ்சுப்பகுதியில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### டில்லியில் ஏறினார்

கடத்தல்காரர் புதுடில்லியில் பாலம் விமான நிலையத்தில் இவ்விமானத்தில் ஏறினார் என்றும் அறிவிக்கப்பட்டது,

இத்தாலிய தூதரக அதிகாரிகள் இவரது மனைவி, 4 வயது மகன் ஆகியோர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிப்பதில் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

### பிரயாணிகள் விபரம்

260 விமா[illegible] நோய்வாய்ப்பட்டுள்ள 2 பிரயாணிகளும் இந்தியத் தாய் ஒருவரும், அவரது குழந்தையும் விடுவிக்கப்பட்டுள்ளனர்

இவ்விமானத்தில் 60 ஜப்பானியர்களும், 36 தாய்லார்துக்காரர்களும் 4 பிரெஞ்சுக்காரர்களும், 5 ஆஸ்திரியர்களும், மற்றும் கனடியர்களும், கொரியர்களும் இத்தாலியர்களும், 22 இந்தியர்களும் பிரயாணத்தை மேற்கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

இலங்கை வெளிநாட்டு அமைச்சர் இங்குள்ள தாய்லாந்து தூதுவருடன், அடிக்கடி தொடர்பு கொண்டு வருகின்றார் என்றும் கூறப்படுகிறது.

### தகர்க்கப்படும் என்று எச்சரிக்கை

எவராவது விமானத்தை நெருங்கினால் விமானம் தகர்க்கப்படும் என்று கடத்தல்காரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இத்தாலிக்குச் சொந்தமான இந்த விமானம், ரோமாபுரியிலிருந்து டோக்கியோ நோக்கிச் சென்று கொண்டிருந்தது. புதுடில்லி பாலம் விமான நிலையத்தில் தரித்து புறப்பட்ட போது, கடத்தல்காரர் இவ் விமானத்தில் ஏறியதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

### உயர்மட்ட விசாரணை

விமான நிலையத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில், இலங்கையைச் சேர்ந்த இந்த இளைஞர் குண்டுகளுடன் எப்படிஏறினார்என விமான நிலைய அதிகாரிகளும், பாதுகாப்பு அதிகாரிகளும் உயர்மட்ட விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விமானம் பாங்கொக்கில் 7 மணி நேரத்திற்கு மேலாக, தங்கியிருக்கிறது விமான நிலையத்தைச் சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

புதுடில்லி, பாலம் விமான நிலையத்தில் கடத்தல்காரர் மற்றும் 34 பயணிகளுடன் ஏறிக்கொண்டார் என்று கூறப்படுகிறது.

விமானத்தில் மொத்தம் 261 பேர் இருந்ததாவும், இவர்களில் நாலவர் விடுவிக்கப்பட்டதாகவும், கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகிறது.

புதுடில்லி பாலம் விமான நிலையத்தில் தீவிர சோதனையின்போது கடத்தல்காரர் எப்படி குண்டுகளுடன் பிடிபடாமல் தப்பிக் கொண்டார் என்பதுபற்றி டில்லி விமான நிலையத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்கூறப்படுகிறது.

## இப்படியும் நடக்கிறது

உலகின் பல நாடுகளிலுமுள்ள வானொலி நிலையங்களில் தமிழ் மணம் கமழ்ந்துவரும் நேரத்தில், மொரீஷியஸை அடுத்துள்ள றீயூனியன் தீவில், ஒரு புதிய தமிழ் ஒலிபரப்புச் சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பது...... தேனாக இனிக்கிறது!

இந்த ஒலிபரப்புச் சேவையை, அங்குள்ள பிரெஞ்சு தமிழ் பண்பாட்டுக் கழகம் நடத்திவருகிறது.

தினமும் ஐந்துமணி நேரம் ஒலிக்கும் இச்சேவையின் பெயர் என்ன தெரியுமா? ''ரேடியோ கலைவாணி!''

'ஊடுருவி'

## நாட்டுக்கு---

[1-ம் பக்கத் தொடர்ச்சி

நாட்டின் மிக உயர்ந்த விருதாகும். தாமரை பதிக்கப்பட்ட தங்கப் பதக்கமே இவ் விருதாகும். இவ்விருது ஐந்து பேருக்கு மட்டுமே ஒரே நேரத்தில் வழங்கப்படும்.

ஜனாதிபதி தமது சொந்த விருப்பப்படி இந்த ஐந்து பேரையும் தெரிவு செய்வார்.

இதற்கு அடுத்த உயர் விருதாக ''தேசமான்ய''வழங்கப்படும். 25பேருக்கு வழங்கப்படும் வெள்ளியிலான இவ் விருதில் யானையின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும்.

'தேசபந்து' என்ற அடுத்த விருது3பிரிவாக வழங்கப்படும்.

இவ்விருது வெள்ளியிலான 50 பதக்கங்களும் செப்பிலான 100 பதக்கங்களும், பித்தளையிலான 200 பதக்கங்களும் வழங்கப்படும். இப் பதக்கங்களில் மயில் சின்னம் பொறிக்கப்படும்.

'சிறிலங்கா சிகாமணி'என்ற மற்றொருவிருது 'சிறிஒளி பாதம்' பொறித்து வழங்கப்படும். 'சிறிலங்கா திலக', 'வீரசூடாமணி',வீரபிரதாப', 'வித்யாஜோதி', 'வித்தியாநிதி', 'கலகீர்த்தி' ,கலாசூரி' ஆயவிருதுகளும் வழங்கப்பட இருக்கின்றன,

இவ்விருதுவழங்குவதுகுறித்து ஜனாதிபதிக்கு சிபார்சு செய்வதற்கென ஒரு குழுநியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைச் செயலாளர் திரு. ஜி. வி. பி. சமரசிங்க, பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர்திரு. சிறீவர்த்தன, உள்நாட்டுஅலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. ஜி. கமகே, கலாச்சார அமைச்சின் செயலாளர் திரு. வத்துலாஹெட்டி, கல்வி அமைச்சின் செயலாளர் திரு.ஈ. எல். விஜயமான, பாதுகாப்பு அமைச்சின் பிரதம இணைப்பு அதிகாரி திரு. டி. எஸ். ஆட்டிகலை ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

(ம-இ)

## குட்டிமணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

வதாகவும் தெரிவிக்கப்பட்டதை அடுத்து இதுகுறித்து கலாநிதி நலன் திருச்செல்வம் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினர். [ம-இ]


# ஹோம் பிறன்ஸ் லிமிட்டெட்

## புதிய உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 8-00 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பிறன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 370—438—537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி.
தொலை பேசி இல; 273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிறன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105,ஒல்கொட் மாவத்தை,புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) ஸ்ரீமணிமலர் ஸ்டோர்ஸ்
இல: 157/2, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு—11
தொலைபேசி இல: 23277

(5) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 61-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூலை மீ 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/82
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone 389 and 8126.